மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அன்றே இங்கு நான் பேசியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையின் மூலம் விநியோகம் செய்வதற்கான முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று இங்கே பேசியிருக்கிறேன். இதையே தான் அங்கேயும் சொல்லியிருக்கிறேன். மண்ணெண்ணெயைப் பற்றிய பிரச்னை வருகின்றபோது, முதலமைச்சரவர்கள் பின்னே உணவு அமைச்சரவர்கள் பேசுகிறபோது மண்ணெண்ணெயை எப்படி விநியோகம் செய்வது என்கிற விளக்கங்களைச் சொல்வார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் 27—3—1973 அன்றே எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம் என்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன். இங்கே குறிப்பில் இருக்கிறது. அதையே தான் நான் அங்கே சொன்னேன். 4-40. பி. ப.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மாண்புமிகு உணவு அமைச்சர் கொடுத்த பதிலுக்குப் பிறகு நான் அனுமதி மறுக்கிறேன். ஆனால் இந்த மாதிரி சர்ச்சைகள் அடிக்கடி அவையிலே நடக்க வேண்டுமென்று விரும்புகின்றவன் நான். ஏனென்றால் நாம் இது நாள் வரையிலும் எவை எவை நல்ல பத்திரிகைகள் என்று நினைத்துக்கொண்டிருந்தோமோ அவைகளில் இது போன்ற புரட்டுச் செய்திகள் வருகின்றபோது, மக்களுக்கும், ஆள்கிற நமக்கும் இடைவெளி அதிகமாகப் போய் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளமுடியாத நிலைமை இங்கே இருக்கிறது. அமைச்சரவர்கள் கொடுக்கின்ற பதில்கள் மூலம் ஒரு விளக்கத்தைப் பெறுகிறார்கள் என்ற காரணத்திற்காகவே இப்படிப்பட்ட விவாதங்களை அனுமதிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களும் இதை breach of privilege என்று எடுத்துக் கொள்ளாமல் breach of courtesy என்று எடுத்துக்கொள்வது நல்லது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, 'Breach of privilege' ஆவது பரவாயில்லை. அமைச்சர்கள் 'breach of courtesy' பண்ணுவது இன்னும் "still worse" ஆகவே 'breach of courtesy' செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: The Hon. Chairman's ruling cannot be questioned. It stands, Sir.

3. அறிவிப்புகள்

(1) பேரவையிலிருந்து செய்தி

MR. CHAIRMAN: I have received messages from the Deputy Speaker, Legislative Assembly transmitting copies of the Presidency

[Mr. Chairman]

Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973) and the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 6 of 1973), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

(2) அவை அலுவல் குறித்து

MR. CHAIRMAN : I have to inform the House that the Legislative Council will meet on the 3rd April 1973 and again on 5th April 1973 to consider the Official Bills.

If any hon. Member has booked reservation in the Railways for journey tomorrow, he may cancel it and get reservation for travel on 5th night.

4. கவன ஈர்ப்பு

விக் இந்தியா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதும் பதட்ட நிலையும் குறித்து.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் ஓர் அங்கமாகிய விக் இந்தியா தொழிற்சாலைக்கு முன்புறமும் உட்புறமும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளதும், 21—3—1973 ஆம் நாளன்று முற்பகலில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் ஒரு அங்கமாகிய விக் இந்தியா தொழிலாளர் சங்க உறுப்பினரும், கேண்டின் கமிட்டி உறுப்பினருமான திரு. பி. பத்தராயன் என்பவர் கடுமையாக வன் முறையால் தாக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு படுகாயப் படுத்தப்பட்டுள்ளது அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து."

*** மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அம்பத்தூரில் உள்ள விக் இந்தியா தொழிற்சாலையில் 603 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இதில் இரண்டு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. இதில் அங்கீகாரம் பெற்றது (1) விக் இந்தியா தொழிலாளர் முன்னேற்ற சங்கம், தி.மு.க. வைத் தழுவியது. இச் சங்கத்தின் தலைவர் திரு. காட்டூர் கோபால், இதில் சேர்ந்த அங்கத்தினரின் எண்ணிக்கை சுமார் 400 பேர். (2) அங்கீகாரம் பெறாத குசேலரைத் தலைவராகக் கொண்ட (ஸி.ஐ.டி.யு) தொழிற் சங்கம் இருக்கிறது. இதில் சுமார் 100 பேர்கள் இருக்கின்றனர்.